**நானாவித வெளிநாட்டு உதவியளிக்கப்பட்ட செயற்திட்டம் (பிரான்ஸ் அரசாங்க நிதியின் கீழ் 46 பாலங்களின் புனர்நிர்மாணப் பொதி) - 2014**

---

நானாவித வெளிநாட்டு உதவியளிக்கப்பட்ட செயற்திட்டத்தின் (பிரான்ஸ் அரசாங்க நிதியின் கீழ் 46 பாலங்களின் புனர்நிர்மாணப் பொதி) 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய தொடர்ந்து எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. இச் செயற்திட்டமானது பிரான்ஸ் அரசாங்கத்தின் சார்பில் பிரான்ஸின் நற்றிக்சிஸ் வங்கிக்கும் இலங்கையின் நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சிற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2012 நவம்பர் 05 ஆந் திகதிய பீ 920 ஏ 1 ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் கீழ் அமலாக்கப்படுகின்றது.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், குறிக்கோள்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின் படி, முன்னாள் நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் கப்பற்துறை அமைச்சும் தற்போதைய உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் வீதி அபிவிருத்தி அதிகாரசபை செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராக உள்ளது. கடன் உடன்படிக்கைக்கமைய இலங்கையில் 46 உருக்கு பாலங்களை வழங்கி நிர்மாணிப்பதே செயற்திட்டத்தின் நோக்கமாக உள்ளது. கடன் உடன்படிக்கைக்கமைய செயற்திட்டத்தின் மொத்த மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 7,564 மில்லியனிற்கு சமமான யூரோ 45.80 மில்லியனானதுடன் அதில் ரூபா 3,642 மில்லியனிற்கு சமமான யூரோ 22.05 மில்லியன் பிரான்ஸ்சின் நற்றிக்சிஸ் வங்கியால் நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் 2013 யூலை 17 இல் தொடங்கப்பட்டிருந்ததுடன் 2015 யூலை 17 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டது.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்கள் இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக எற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களில் இருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் தீர்மானிக்கும் அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகளிற்கும் முகாமைத்துவம் பொறுப்பாகும்.

## 1.4. கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு ஏற்ப நான் கணக்காய்வை மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக

சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டு மொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவம் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும், செயற்திட்ட தொழிற்பாடுகள் தொடர்பான, ஏடுகள், பதிவேடுகள் முதலியவற்றின் நம்பகத் தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகளும் கட்டுப்பாடுகளும் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள செயற்திட்டத்தின் செலவினங்கள் முன்னேற்றப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தனவா என்பதும்,

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன்வழங்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட அளவீடுகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(உ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள், மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்டத்தின் நோக்கங்களுக்காக பயன்படுத்தப்பட்டு இருந்தனவா என்பதும்,

(ஊ) செயற்திட்டத்தின் அமுலாக்கலுக்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(எ) நிதிக்கூற்றுக்கள் இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டுத் நியமங்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஏ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஐ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதி நிபந்தனைகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2 நிதிக்கூற்றுக்கள்

### 2.1. அபிப்பிராயம்

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும், இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து எழும் செம்மையாக்கல்களின் தாக்கத்தை தவிர்த்தும்,

(அ) செயற்திட்டமானது 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளை பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டுத் நியமங்களுக்கிணங்க 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலைவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) ஏற்பாடு செய்யப்பட்ட நிதிகள் அவை ஏற்பாடு செய்யப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும்,

(ஈ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதி நிபந்தனைகளுடன் இணங்கியிருந்தன என்றும் நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 2.2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடு

04 இடைக்கால கொடுப்பனவு சான்றிதழ்களின் கீழ் அனுமதிக்கப்பட்ட 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 32.89 மில்லியன் தொகையான செய்யப்பட்ட வேலைகளின் பெறுமதி நடைபெறும் வேலைகள் கணக்கிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

## 3. நிதி மற்றும் பௌதீக செயலாற்றல்

### 3.1 நிதிப் பயன்பாடு

மீளாய்வாண்டிற்கான நிதியளிப்பு, பாதீட்டு ஏற்பாடுகள் மற்றும் மீளாய்வாண்டு மற்றும் 2014 திசெம்பர் 31 வரையான நிதிகளின் பயன்பாடு என்பன தொடர்பான சில முக்கியமான புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| மூலம் | கடன் உடன்படிக்கையில் நிதியளிப்பதற்காக உடன்பட்ட தொகை | | மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டில் செய்யப்பட்ட ஒதுக்கீடு | பயன்படுத்திய நிதிகள் | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | 2014 ஆம் ஆண்டின் போது | | 2014 திசெம்பர் 31 வரை | |
| | யூரோ மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | யூரோ மில்லியன் | ரூபா மில்லியன் | யூரோ மில்லியன் | ரூபா மில்லியன் |
| பிரான்ஸ் அரசாங்கம் | 22.05 | 3,642 | 2,318 | 14.68 | 2,318 | 17.93 | 2,832 |
| இலங்கை அரசாங்கம் | 23.75 | 3,922 | 924 | 2.98 | 470 | 4.12 | 651 |
| **மொத்தம்** | **45.80** | **7,564** | **3,242** | **17.66** | **2,788** | **22.05** | **3,483** |

### 3.2 பௌதீக முன்னேற்றம்

செயற்திட்டமானது யூரோ 22.05 மில்லியன் பெறுமதியான பாலங்களின் கூறுகளை வழங்குவதற்கு வெளிநாட்டுக் கம்பனி ஒன்றுடன் 2012 திசெம்பர் 12 இல் ஒப்பந்தமொன்று கைசாத்திட்டிருந்ததுடன் பாலத்தின் நிர்மாண வேலைகள் 2013 யூலை 19 இல் தொடங்கப்பட்டது. ஒப்பந்த உடன்படிக்கையின் 17 ஆம் உட்பிரிவின் பிரகாரம், சகல பயன்பாட்டு உபகரணங்களுடன் சேர்த்து பாலக் கூறுகள் 730 நாட்களிற்குள் வழங்கப்பட வேண்டும். எவ்வாறாயினும், செயற்திட்ட நடவடிக்கைகள் தொடங்கியதிலிருந்து 545 நாட்கள் கடந்த பின்னர், பயன்பாட்டு உபகரணங்கள் உள்ளடங்கலான 25 பாலக் கூறுகள் மாத்திரம் வழங்கப்பட்டிருந்ததுடன் அதில் 20 பாலங்களின் நிர்மாண வேலைகள் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பூர்த்தியாக்கப்பட்டிருந்தது.

### 3.3 ஒப்பந்த நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம், ஒப்பந்தகாரர் கிரிந்திவிட்ட- அசன்னாவத்த வீதியின் 1/1 ஆம் இலக்க பாலத்தினுடைய புவியியல், நீரியல் மற்றும் வரைபட அளவை, விரிவான வடிவமைப்பு மற்றும் கட்டமைப்புகளின் நிர்மாணம் என்பவற்றினை மேற்கொள்வதற்கு வேண்டப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், அந்த பாலங்களின் விரிவான வடிவமைப்புகள் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பால வடிவமைப்பு பிரிவால் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அவற்றின் மீது ரூபா 621,281 ஆன தொகை செலவழிக்கப்பட்டிருந்தது. ஒப்பந்தகாரரிடமிருந்து கிரயத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) செயற்திட்டத்தால் பரீட்சித்தல் அறிக்கை பதிவேடுகள் பேணப்பட்டிருக்காததுடன் பின்வரும் பாலங்களின் நிர்மாணங்களின் தரமான பரீட்சிப்பு அறிக்கைகள் கணக்காய்விற்கு கிடைக்க செய்யப்பட்டிருக்கவில்லை.

(i) மாத்தளை இல்லுகுபுரா வீதியின் 2/8 ஆம் இலக்க பாலம்

(ii) மாத்தளை - இல்லுகுபுரா – பல்லேகம வீதியின் 9/8 ஆம் இலக்க பாலம்

(iii) வத்தேகம –கன்தேநுவர – வாரியப்பொல வீதியின் 28/2 ஆம் இலக்க பாலம்

(iv) தம்பகஹபிட்டிய –பின்னகொல்ல – அரவா மீகாஹகைல வீதியின் 12/3 ஆம் இலக்க பாலம்

மேலும், பாலங்களின் நிர்மாண வேலைகளிற்காக பயன்படுத்தப்பட்ட கொங்றீட்டின் விரிவான வலுப்படுத்தலின் அடைதலை நிரூபிப்பதற்கு இயலக்கூடியவாறு பொறியியலாளரின் சான்றிதழுடன் இணைக்கப்பட வேண்டுமென வேண்டப்பட்ட தரப் பரீட்சிப்பு அறிக்கைகள் இணைக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) பதுளை- கரமெட்டிய- அன்டல்பத்த வீதியின் 17/5 ஆம் இலக்க பாலத்தின் கொங்றீட்டின் விரிவான வலுப்படுத்தலை பரீட்சித்தல் சுதந்திரமான தரப்பினரிடமிருந்து அத்தகைய பரீட்சிப்பு அறிக்கைகளைப் பெறுவதற்கு பதிலாக ஒப்பந்தகாரருக்கு உடமையான ஆய்வுகூடத்தில் செய்யப்பட்டிருந்தது.

### 3.4. சர்ச்சைக்குரிய தன்மையான விடயங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பொது முயற்சிகள் திணைக்களத்தின் 2003 யூன் 02 ஆம் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 8.3.9 மற்றும் 8.6 ஆம் பந்திகளுக்கு முரணாக, ரூபா 978,351 தொகையான மேந்தலைக் கட்டணங்கள் மற்றும் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் ஊழியர்களிற்காக ரூபா 191,378 தொகையான மருத்துவ விடுமுறையை காசாக்கல் மீளாய்வாண்டின் போது வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு அனுப்பப்பட்டிருந்தது.

(ஆ) ரூபா 81.56 மில்லியன் கிரயத்தில் நிர்மாணிக்கப்பட்ட நீர்கொழும்பு-கிருல்ல வீதியின் 32/2 ஆம் இலக்க பாலத்தின் திறப்பு விழாவிற்காக செயற்திட்டத்தால் ரூபா 2.31 மில்லியன் தொகையான விளம்பரக் கட்டணங்கள் ஏற்பட்டிருந்தது.

(இ) முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் இல்லாமல் செயற்திட்டத்தால் ஈடுபடுத்தப்பட்ட 02 ஆலோசனையாளர்களின் குழுக் குறிப்புகள் அடிப்படையில் செயற்திட்டத்தால் ரூபா 2.10 மில்லியன் கூட்டு மொத்தத் தொகையான வேதனங்கள் செலுத்தப்பட்டிருந்த போதிலும் கணக்காய்விற்கு கிடைத்திருக்கவில்லை.

(ஈ) மேலும், ரூபா 206,547 தொகையான செயற்திட்ட கணக்காளர் பதவிக்கான பதில்கடமைப் படி வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் நிதி பணிப்பாளருக்கு 2014 மே மாதம் வரை செலுத்தப்பட்டிருந்தது.

### 3.5. மனிதவள முகாமைத்துவம்

செயற்திட்டத்தின் பதவியணி முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் 33 பதவியணி நிலைகள் அனுமதிக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டு இறுதியில் 18 உறுப்பினர்களைக் கொண்டிருந்தது. 02 சிரேஸ்ட பொறியியலாளர்கள், 05 தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் மற்றும் 07 பொறியியலாளர்கள் போன்ற பிரதான பதவிகள் உள்ளடங்கலாக பதவிகளிற்கான வெற்றிடங்கள் மீளாய்வாண்டு இறுதியில் நிரப்பப்படாமல் இருந்தது. மேலும், 04 ஆலோசனையாளர்கள், ஒரு தொழில்நுட்ப உதவியாளர் மற்றும் ஒரு மென் உபகரணச் செயற்படுத்துநர் உள்ளடங்கலான 05 ஊழியர்கள் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் வேண்டப்பட்ட அங்கீகாரம் இல்லாமல் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் செயற்திட்டத்தால் ரூபா 2.26 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது.